
# “கால்நடை மருத்துவ அறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வும் தொண்டும்”

32176



ராவ் சாஹிப்
**வெ.ப.சுப்பிரமணிய முதலியார், G.B.V.C.**

வெளியீடு
**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
சென்னை - 51.



Vellakal Pa. Subramania Mudaliar

# கால்நடை மருத்துவ அறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வும் தொண்டும்




ராவ் சாஹிப்

**வெ.ப. சுப்பிரமணிய முதலியார்**, G.B.V.C.



வெளியீடு

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**

மாதவரம், சென்னை - 600 051.

# நூற்குறிப்பு

நூலின் தலைப்பு : "கால்நடை மருத்துவ அறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் வாழ்வும் தொண்டும்"

முதற்பதிப்பு : ஏப்ரல் 2010.

பக்கம் : 48

நூல் வெளியீட்டாளர் : முனைவர்.
**து.கதிரேசன்**,எம்.வி.எஸ்.சி.,பிஎச்.டி.,
இயக்குநர்,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்,
சென்னை 600 051

நூல் உரிமை : இயக்குநர்
விரிவாக்கக் கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை - 51.

நூல் ஆக்கம் (தொகுத்து எழுதியவர்) : **ச. பாஸ்கர்**, எம்.ஏ.
மக்கள் தொடர்பு அலுவலர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்,
சென்னை - 51.

அச்சகம் : நூல் வெளியீட்டுப் பிரிவு
விரிவாக்கக் கல்வி இயக்ககம்,
சென்னை - 51.

பிரதிகள் : 500

விலை : ரூ.20/-


நூல் கிடைக்குமிடம் : நூல் வெளியீட்டுப் பிரிவு,
விரிவாக்கக் கல்வி இயக்ககம்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை - 600 051.
✆ : 044 - 25554375

# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

முனைவர் **ப. தங்கராஜு,** பிஎச்.டி., நாள் : 23-04-2010

துணைவேந்தர்,
மாதவரம் பால்பண்ணை வளாகம்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக் கழகம்,
சென்னை - 600 051.

## அணிந்துரை



வெள்ளகால் ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தமிழகத்தின் முதல் கால்நடை மருத்துவர். ஆங்கிலேய அதிகாரிகளின் வழி காட்டுதலோடு தமிழகத்தில் மேலைநாட்டுக் கால்நடை மருத்துவத்தைப் புகுத்திய முன்னோடி. கால்நடைகளுக்கு ஏற்பட்ட வெக்கை நோயினை ஒழித்திட்ட முதல் கால்நடை மருத்துவர். 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் மற்றும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் திரு.வெ.ப.சு. அவர்களை தெரியாதவர் யாரு மில்லை. அக்காலத்தில் தமிழ்நாட்டில் பிள்ளையவர்கள் என்றால் திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களை குறிக்கும். ஐயரவர்கள் என்றால் டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்களை குறிக்கும், முதலியாரவர்கள் என்றால் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியாரை குறிக்கும் என்று நமக்கு வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றது. மேற்கண்ட பெருமக்கள் யாவரும் தமிழ் இலக்கியங்களில் ஆழ்ந்தகன்று அவிந்தடங்கிய சான்றோர்கள் என்றால் மிகையில்லை - இப்பெரு மக்களுள் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் தல புராணங்கள், அந்தாதிகள், சிறு பிரபந்தங்கள் போன்ற நூல்களை யெல்லாம் நமக்கு அளித்துள்ளார்கள். டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் சீவகசிந்தமணி, போன்ற காப்பியங்கள், சங்க இலக்கிய நூல்களையெல்லாம் நமக்கு அரிதின் முயன்று ஏடு தேடி அலைந்து சேகரித்து நூலாக்கி தமிழ்ச் சமுதாயம் பயன்பெற அளித்துள்ளார்கள்.

மூன்றாவதாக இந்நூலின் நாயகர் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் முதலில் அரசாங்க அதிகாரியாய் அரசாங்கப் பணியில் இருந்து கொண்டு எப்படி இவ்வளவு நூல்கள் எழுத முடிந்தது என்பது வியப்பாக உள்ளது. கால்நடைத்துறைக்கு என்று அடிப்படையான இரண்டு நூல்கள் மொழிபெயர்த்து எழுதியுள்ளார். பின்னர், வெ.ப.சு தம் மருத்துவ அனுபவத்தில் அம்மை குத்துதலும், அதன் உபயோகங் களும் எனும் நூலை எழுதியுள்ளார். நூல் எழுதுவதுபற்றி அவர் சொல்கிறார். "நான் தமிழ் நூல்கள் குறிப்பாக கால்நடைத்துறைக்கு எழுதும்போது "ஒரு ஜனக்கூட்டம் நிறைந்த உழவர் பெருமக்களிடையே அவர்கள் மொழியில் இறங்கி வந்து சகஜமாக உரையாடுவதைப் போல நூலினை எழுதுவேன்" என்கிறார். இதில் வெ.ப.சு. அவர்கள் சாதாரண மக்களுக்கு, உழவர் பெருமக்களுக்கு ஏற்றவாறு நூல்களைப் படைப் பதில் ஆர்வம் காட்டியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது. இன்னொரு புறம், வெ.ப.சு. அவர்களும் உயர்ந்த முயற்சிகளைச் செய்துள்ளார். மேலைநாட்டில் "ஷேக்ஸ்பியரின் அழகுகள்" எனும் தலைப்பில் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களை எல்லாம் ஆய்ந்து படித்து *Beauties of Shakespear*" எனும் தலைப்பில் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் உள்ள நயமிக்க, சுவை மிக்க பகுதிகளைத் திரட்டி ஆங்கிலம் கற்றோர் அனைவரும் படித்து இன்புறும்படி வெளியிட்டுள்ளார்கள்.

அதே போல் தமிழிலும் வெ.ப.சு அவர்கள் "கம்பராமாயண சாரம்" என்ற தலைப்பில் கம்பராமாயணத்தில் உள்ள நயமான பகுதிகளையும், உட்பொருள் விளங்காத செய்யுள்களில் உள்ள அருமையான விஷயங்களையும் பலாச்சுளையாகப் படிப்போருக்குத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ளார்கள்.

கால்நடை மருத்துவத்தைக் கற்ற முதல் தமிழர் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறையை உருவாக்கியச் சிற்பி வெ.ப.சு. என்று கூட சொல்லலாம். கால்நடைப் பராமரிப்புத் துறையைக் கட்டமைத்தவர் என்றும், துறையின் உயர்ந்த பதவியை அடைந்த முதல் தமிழர் என்றும், இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். சென்னை வேப்பேரியில் உள்ள பவானந்தர் கழகத்தையும், நூல் நிலையத்தையும், தோற்றிவித்த முன்னாள் சென்னை மாநகர காவல் துறை உதவி கமிஷனர் 'தமிழ் அறிஞர்' திவான்பகதூர் எஸ்.பவானந்தம்பிள்ளை அவர்கள் வெ.ப.சு அவர்களைப் பற்றி

எழுதிய குறிப்பினை ஒவ்வொரு கால்நடை மருத்துவரும், பேராசிரியரும் படித்துப் பெருமைக் படக்கூடிய விஷயமாகும்.

*"As a responsible gazetted officer in Veterinary Dept. you have rendered yeoman especially by the diffusion of useful knowledge regarding Veterinary subjects by the publication of series of works. As a vigorous prose writer, translator, commentator and a poet, you have set an example which is unprecedented as it is difficult to be followed. In fact, you have placed the tamil world under deep debt of gratitude "*

**- Diwan Bahudur S.Bavanandam Pillai,**
**I.S.O., O.B.E., F.R.H.S (Lond) M.R.A.S. (Lond.)**
**(Asst.Commissioner of Police), Madras,**
**Dated : 27-07-1928.**

கால்நடைத்துறைக்கும், தமிழன்னைக்கும் வெ.ப.சு. அவர்கள் ஆற்றிய சேவையை திவான்பகதூர் எஸ்.பவானந்தம்பிள்ளை ரத்தினச் சுருக்கமாக ஆங்கிலத்தில் தந்துள்ளார். வெ.ப.சு. அவர்கள் கால்நடைத் துறையில் ஆற்றிய பங்கு பணிகள் பற்றி முழுமையாக ஒரு நூல் இருந்தால் எதிர்காலச் சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்குமே என நினைத்தேன். அதனை குறிப்பால் உணர்ந்த எமது பல்கலைக் கழக மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.பாஸ்கர் அவர்கள் அரிதின் முயன்று தகவல்களையும், ஆதாரத் தரவுகளையும் சேகரித்துத் தொகுத்தெழுதி மாலையாக நூல் வடிவில் நமக்குத் தந்துள்ளார். அவருக்கு என் வாழ்த்தினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன். "கால்நடைத்துறை அறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வும் தொண்டும்" எனும் இந்நூல் ஒவ்வொரு கால்நடை மருத்துவரிடமும், பேராசிரியரிடமும், தமிழ் இலக்கிய வாணர்களிடமும் இருக்க வேண்டிய அரிய நூல் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்க வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் புகழ்.

அன்பன்

**(ப. தங்கராஜு)**

நூலாசிரியர்

## நன்றியுரை

தென்னாசிய நாட்டின்கண் சிறந்தோங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலையின் பொன்னான குணம் வாய்ந்த பெருந் தமிழர், துணைவேந்தர் பழனி முத்து தங்கராஜு பணியாற்றும் காலத்திலே, தமிழ்நாட்டின் முதல்தமிழர், கால்நடைத் துறைக்கே எனப் பாரோர் பாங்குடன் போற்றுகின்ற பெருமனிதராம்; ராவ்சாகிப் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியாரின் "வாழ்வும் தொண்டும்" என்கின்ற தலைப்பிலான நூல் எழுதக் குறிப்பால் உணர்த்திய பெருமகனார், நாளும் சிந்தித்துச் செயல் பலவாற்றுகின்ற எம் துணைவேந்தருக்கு, நூலினை தொகுத் தெழுதிய அடியேன் கார் உள்ளளவும் நீர்உள்ளவும் இப்பார் உள்ளளவும் நெஞ்சார நன்றி கூறுகின்றேன்.

நன்றி!


அன்பன்

**சு. பாஸ்கர்**

மக்கள் தொடர்பு அலுவலர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ
அறிவியல் பல்கலைக் கழகம்,
மாதவரம், சென்னை - 51.

# பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | இளமைக்கல்வி | 9 |
| 2. | விவசாயமும் கால்நடையும் | 11 |
| 3. | கால்நடை மருத்துவப் பணியும், மொழி பெயர்ப்பும் | 13 |
| 4. | கிராமங்களில் கால்நடைமருத்துவ முகாம் | 15 |
| 5. | வெக்கை நோய்த் தடுப்பூசி | 17 |
| 6. | பதவி உயர்வு | 19 |
| 7. | இந்தியக் கால்நடைச் சங்க இதழ் பாராட்டு | 21 |
| 8. | கால்நடைப் பட்டதாரிகள் மாநாட்டின் தலைமை | 23 |
| 9. | ஆசிரியர்களுக்கு அலவன்ஸ் | 24 |
| 10. | கட்டில் செய்த கதை | 26 |
| 11. | ஆசிரியப்பாவில் ஒரு கவிதை | 28 |
| 12. | அறிவியல் செய்தி தரும் கோம்பி விருத்தம் | 30 |
| 13. | கோம்பி விருத்தத்தைப் பாராட்டிய அறிஞர்கள் | 33 |
| 14. | ஞானபோதினி மற்றும் கிறித்தவக் கல்லூரி இதழ் தரும் பாராட்டு | 35 |
| 15. | பேரும் புகழும் | 36 |
| 16. | எண்பதாம் ஆண்டு நிறைவு விழா | 37 |
| 17. | அறக்கட்டளை | 39 |
| 18. | வெ.ப.சு. - சில நினைவலைகள் | 40 |
| 19. | வெ.ப.சு அவர்கள் எழுதிய நூல்கள் | 46 |



காங்கேயம் காளை

# கால்நடை மருத்துவ அறிஞர் வெ.ப.சுப்பிரமணிய முதலியாரின் வாழ்வும் தொண்டும்

## பிறப்பு

பண்டைய பெருமையும், தொன்மையும் வாய்ந்த திக்கெட்டும் தமிழ் மணம் பரப்பும் திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்தவர் வெ.ப.சு. அவர்கள்.

பண்பாடும், செழுமையும் தொன்றுதொட்டே நல்வாசம் செய்யும் உயர்ந்த குடும்பத்தில் பழனியப்பமுதலியார் உலகண்ணி தம்பதிகளுக்கு மகனாக 14.8.1857ஆம் நாள் ஆழ்வார் குறிச்சியில் பிறந்தவர் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.


## இளமைக்கல்வி

வெள்ளகாலில் பிறந்த வெ.ப.சு. ஐந்து வயதை அடைந்த வுடன். தமது அத்தையின் கணவர் திருநெல்வேலி மேடை தளவாய் குமாரசாமி முதலியார் அவர்களது அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். அவ்வரண்மனைக்கு அருகில் உள்ள புதுத்தெரு கணபதிப் பிள்ளையின் திண்ணைப் பள்ளியில் ஆரம்பக்கல்வியும், நெல்லை அரசரடிப் பாலத்தில் இருந்த மிஷின் பள்ளியில் தமிழோடு ஆங்கிலமும் சேர்த்துப்

பயின்றார். பின்னர் அங்குள்ள இந்து கலாசாலைப் பள்ளியில் சேர்ந்து மெட்ரிகுலேஷன் படிப்பை நிறைவு செய்தார்கள்.

## சென்னைக் கிறித்தவக் கல்லூரி

மெட்ரிகுலேஷன் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு சென்னை கிறித்தவக் கல்லூரியில் சேர்ந்து இளங்கலை கல்வி பயில முயன்றார்கள். இரண்டு ஆண்டுகள் அங்குப் பயின்றும் பட்டம் பெற இயலவில்லை. ஆனால், அங்கு வெ.ப.சு. அவர்களுக்குப் பாடம் எடுத்த பாதிரிமார்களாகிய டாக்டர் மில்லர், டாக்டர் கூப்பர் ஆகியவர்கள் அளித்த அறிவுரைகள், நல்ல பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைத் தெரிந்து கொண்டு அதன்படி வாழ முடிவெடுத்தார். கிறித்தவக் கல்லூரியில் வெ.ப.சு. கற்றுக்கொண்ட அறிவுரைகள் ஐந்து ஆகும். அவை 1. புலனடக்கம், 2. புலால் உண்ணாமை 3. மது அருந்தாமை 4.தமிழில் எழுத்தறிவும், கல்வி அறிவும் பெறுவதில் எல்லோருக்கும் முன் நிற்பது. 5. ஆங்கில மொழி அறிவால் எல்லோருக்கும் முன்நிற்பது போன்றவையாகும். அறிஞர் வெ.ப.சு. அங்கு பரீட்சையில் தேர்ச்சி பெறாததால் மீண்டும் சொந்த கிராமத்திற்கு சென்று விவசாயம் பார்க்கத் தொடங்கி அடிமட்ட வாழ்வியல் அனுபவங்களை கற்றுக் கொண்டார்.



# விவசாயமும் கால்நடையும்

சொந்த கிராமமான வெள்ளகாலில் ஓராண்டு வேளாண் பணி ஆற்றிய பின் வெ.ப.சு அவர்கள் தம் தந்தையாரின் முயற்சியால் சென்னையில் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட சைதாப்பேட்டை விவசாயக் கல்லூரியில் சேர்ந்து 1884ஆம் ஆண்டு G.M.A.C. (Graduate of Madras Agricultural College) என்ற பட்டம் பெற்றார்கள்.


## உத்தியோகம்

விவசாயக் கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்றவுடன் அரசாங்கம் அப்பொழுது புதியதாக ஏற்படுத்தியிருந்த கால்நடை மருத்துவ இலாக்காவில் 1885ஆம் ஆண்டு "உள்ளூர் கால்நடை நோய் ஆய்வாளராக" பணி ஏற்றார்கள். 1885ஆம் ஆண்டு நெல்லையில் அவர்கள் பணி ஏற்றபோது வாங்கிய மாத ஊதியம் ரூ.50 ஆகும். திறம்பட பணியாற்றியதின் விளைவாக 1887ஆம் ஆண்டு Stock Inspector ஆக பதவி உயர்வு பெற்று ரூ.75/- மாத ஊதியமாக பெற்றார்கள். சரியாக மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தபின் அரசு, கால்நடைத் துறையை எடுத்துவிட 1890ஆம் ஆண்டு முடிவு செய்தது. அதன்படி வேலை இழக்க நேர்ந்த வெ.ப.சு அவர்களின் திறமை கண்டு கால்நடைத்துறையில் சிறப்பாக பணிபுரிந்த ஆறு பேரை மட்டும் வைத்துக் கொண்டு அவர்களை சென்னை வருவாய்த்துறைக்கு எழுத்தர் வேலைக்கு அனுப்பிவிட்டது.

இந்நிலையில் 1894ஆம் ஆண்டு மத்திய அரசின் பெரு முயற்சியால் கால்நடை மருத்துவத்துறை மீண்டும் உதயமாகியது.

முதலியார் அவர்களை அரசு 'இளங்கலை கால்நடை மருத்துவக்கல்விப் (G.B.V.C. Graduate of Bombay Veterinary College) பயில பம்பாய் நகருக்கு அனுப்பி வைத்தது.

மேற்படி கால்நடை மருத்துவக் கல்வியைப் பம்பாயில் நன்கு பயின்று மூன்று தங்க மெடல்களும் பெற்று முதல் மாணவராக வெ.ப.சு தேர்ச்சி பெற்றார்கள். பின்னர் 1895ஆம் ஆண்டு இறுதியில் 100/- ரூபாய் சம்பளத்தில் முதுநிலை கால்நடை உதவியாளர் எனும் பதவி நியமனம் பெற்று 16 ஆண்டுகள் பணிபுரிந்து பின்னர் 1911ஆம் ஆண்டு மாநிலத்தின் கால்நடை டெபுடி சூப்பிரண்டண்டாக (Deputy Civil Veterinary Superintendent) பதவி உயர்வு பெற்று 1915ஆம் ஆண்டு வரை (நான்கு ஆண்டுகள்) புகழுடன் பணியாற்றி ஓய்வு பெற்றார்கள். ஓய்வு பெறும் போது வெ.ப.சு அவர்கள் வாங்கிய மாத ஊதியம் ரூ.300 ஆகும்.



# கால்நடைக் கல்வி, மருத்துவம் ஆகிய துறைகளில் ஆற்றியப் பணிகள்

கால்நடை மருத்துவ இலாக்கா சென்னையில் புதியதாய் உருவாக்கப்பட்ட ஒன்று. அவ்விலாக்காவில் தலைமைப் பொறுப்பில் உள்ள அதிகாரிகளாய் அமைந்தவர்கள் எல்லாம் இங்கிலாந்து நாட்டிலிருந்து வந்தவர்கள். அவர்களோடு பழகி அவர்கள் கொண்டு வந்த கால்நடை மருத்துவ முறையை நம் நாட்டு மக்களுக்கு ஏற்றமுறையில் விளக்கிச் சொல்லி நடைமுறைப்படுத்த வெ.ப.சு வை விட படிப்பறிவும், அனுபவ நடைமுறை ஞானமும் உடையவர்கள் அத்துறையில் இல்லை.

## ஆங்கில நூல்கள் மொழிபெயர்ப்பு

பிறநாட்டுச் சாத்திரங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1885ஆம் ஆண்டு லெப்டினன்ட் கலோனல் ஜேம்ஸ் மில்ஸ் துரை பெருமகனார் எழுதிய "Indian Stock Owner's manual" என்னும் நூலை "இந்து தேசத்துக் கால்நடைக்காரரர் புத்தகம்" என்னும் தலைப்பில் வெ.ப.சு அவர்கள் எளிய தமிழில் மொழி பெயர்த்தார்கள். அந்நூல்தான் ஐரோப்பிய கால்நடை மருத்துவத்தைப் பற்றி முதன் முதலில் வெளிவந்த தமிழ்நூலாகும்.

பின்னர் 16 ஆண்டுகள் கழித்து 1901ஆம் ஆண்டு மீண்டும் ஜேம்ஸ்மில்ஸ் துரை பெருமகனார் எழுதிய இன்னொரு புத்தகமான "More deadly forms of cattle diseases in India"


என்னும் ஆங்கில நூலை "இந்தியாவில் கால் நடைகளுக்குக் காணுகின்ற அதிக பிராணாபாயமான வியாதிகள்" என்ற தலைப்பில் தமிழில் வெளிக்கொண்டு வந்தார்கள். பின்னர் தமக்கு கிடைத்த அனுபவங்களால் கால்நடைகளுக்கு வியாதி வராமல் தடுக்க "அம்மை குத்துதலும் அதன் உபயோகங்களும்" எனும் தலைப்பில் சிறு நூல் ஒன்றினையும் எழுதி வெளியிட்டார்கள்.

**பாராட்டு**

ஆங்கில நூலை தமிழில் மொழிபெயர்ப்பது என்பது மூலநூலுக்கு ஏற்றவாறு பொருள் மாறாமல் தகுந்த சொற்களைப் பயன்படுத்தி மெருகு குறையாமல் படிப்பவர்களுக்குப் பொருள் விளங்க மொழிபெயர்க்க வேண்டும். அப்பணியை வெ.ப.சு அவர்கள் திறம்பட செய்தது கண்டு ஜேம்ஸ் மில்ஸ் துரை அவர்கள் ஆங்கிலத்தில் அளித்த பாராட்டுரை, இதோ:

Extract from the preface (dated 18.2.1885) to the Tamil Translation of "Indian Stock owner's Manual" by Lieut Col.J.Mills, Retired Principal of the Bombay Veterinary College, formerly Inspector of cattle diseases (an office now designated as Director of Veterinary services) Madras Presidency.

"To Mr.V.P. Subramania Mudaliar who undertook the Translation, my best thanks are due. Nothing could equal the patience and skill he has displayed in the work, performed in addition to his other duties as a probationer in the cattle disease inspection dept, now known as Civil Veterinary Dept."



# கிராமங்களில் கால்நடை மருத்துவ முகாம்

கால்நடை மருத்துவ இலாக்காவில் முக்கியமான பணி என்பது அக்காலத்தில் மாட்டுத்தாவணிகளுக்குப் போய் (மாடுகள் கூடும் சந்தை) மாடுகளுக்கு வைத்தியம் செய்வது. இப்படிப்பட்ட மாட்டுத்தாவணிகளுக்குச் சென்று வைத்தியம் செய்ததில் முதலியார் அவர்களுக்கு பெரும்புகழ் கிட்டியது. இதற்கு ஓர் உதாரணம் சொல்ல வேண்டுமானால் கும்பகோணம் நிகழ்வைக் கூறலாம். 1897ஆம் ஆண்டு கும்பகோணத்தில் நடைபெற்ற மகாமகத்தை ஒட்டி நடந்த மாட்டுத்தாவணிக்குக் கால்நடை மருத்துவராக முதலியாரவர்கள் நியமிக்கப் பெற்றார். இவரது பணியினை அம்மாவட்ட சப்கலெக்டர் W.B. எயிலிங் துரை மிகவும் பாராட்டியுள்ளார். அதன் ஆங்கில விபரம் இதோ:

Extract from the endorsement by W.B. Ayling, Esq Sub collector, who retired as Judge of the Madras. High court on the report of the stock inspector - "V.P.S. Mudaliar on the cattle fair held at Kumbakonam in Feb 1897....." The fair was exceedingly well managed by the Inspector, V.P.Subramania Mudaliar".


மேலும் தஞ்சை மாவட்ட கலெக்டர் ஜெ. ஆன்ட்ரூ துரையவர்கள் 19.1.1898 அன்று வழங்கிய பாராட்டுரை, இதோ:

Extract from the letter of J.Andrew, Esq. Collector of Tanjore, (who retired as a Member of the Board of Revenue) 19-1-1898 to the Board... The Sub Collector specially desires

that Mr.R. Ry.V.P.S. Mudaliar, the Stock Inspector, deputed during the last 2 years may be sent this year also. In making this request, he says, "I specially ask for the services of this office as he managed matters last year with conspicuous success and his previous experience will be invaluable. "

"I may add that I saw him a number of times last year and found him thoroughly satisfactory in every way. The success of the fair is in no small measure due to his intelligent supervision and arrangements".

அக்காலங்களில் மாதத்தில் அநேகமாக இருபது நாட்கள் முதலியார் அவர்கள் கிராமங்களில் முகாம்போட்டு தங்கி கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பார் என்பது தெரிய வருகிறது.



# நூற்றாண்டுக்கு முன் வெக்கைநோய் ஒழிப்பு

கால்நடை மருத்துவத்துறையில் மாடுகளுக்கு ஏற்படும் வெக்கை (Rinderpest) நோய்க்கு ஊசி போடுதல் புதியதாக ஏற்பட்ட ஒரு முறையாகும். இந்த முறையை நம் நாட்டில் முதன் முறையாக பழக்கத்துக்குக் கொண்டு வந்தபோது, கால்நடைகளின் சொந்தக்காரர்களிடமிருந்து எதிர்ப்பு அதிகமாக இருந்தது. மாடுகளுக்கு ஊசி போடும் முறை, வெக்கை நோய்ப் பரவாமல் தடுக்கும் முறைதான் என்பதை உழவர்கள் அறியா திருந்தனர். இம்முறையைப் பிரபலப்படுத்த வேண்டுமென்று வெள்ளைக்கார அதிகாரிகள் விரும்பினர். வெக்கை நோய்ப் பரவக்கூடிய கால்நடைகளுக்கு ஊசி போட முதலியார் எடுத்துக் கொண்ட சிரமம் கொஞ்ச நஞ்சமில்லை. தமிழகத்தின் மலைப்பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு இந்நோய் பரவ ஆரம்பித்ததும் அங்கெல்லாம் வெ.ப.சு அவர்கள் முகாம் அமைத்துக் கொண்டு, பல மைல் தூரம் சென்று உணவின்றி வருந்தி இந்த வெக்கை நோய்த் தடுப்பூசி போடும் வேலைக்கு உழைத்திருக்கிறார்கள். 1900-1910ஆம் கால கட்டங்களில் மாநிலத்திலுள்ள பல்வேறு டிவிஷன்களில் (பகுதிகள்) இவர் ஆற்றிய சேவையை மேலதிகாரிகள் மெச்சிப் போற்றுகிறார்கள். கோயமுத்தூர் ஜில்லாவில் சத்திய மங்கலம் பகுதியிலும், தஞ்சாவூர் மாவட்டத்திலும், கர்னூல் மாவட்டத்தில் ஆத்மகூர் டிவிஷனிலும் (அப்பொழுது தமிழ்நாட்டோடு இருந்தது), தடுப்பூசியின் மகத்துவத்தைப் பொதுமக்களிடம் எடுத்துரைத்து,

இந்தப் புது விதமான ஊசி போட்டு நோயைத் தடுக்கும் முறையை மக்களிடையே நடைமுறைப்படுத்துவதில் இவரே கெட்டிக்காரர் என்ற பெயரும் வெ.ப.சு. எடுத்துள்ளார். இந்தத் தடுப்பூசித் திட்டத்தைப் பிரபலப்படுத்தியதில் பெரும் பங்கெடுத்துக் கொண்டவர் முதலியாரவர்கள் என்றும், கால் நடைத்துறை அந்த வருஷம் திட்டமிட்டுச் செய்த வேலையில் பாதி வேலை இவர் ஒருவரே செய்திருக்கிறார் என்றும் உயர்அதிகாரிகள் புகழ்ந்தெழுதி இருக்கிறார்கள்.

Extract from Memorandum No.327/R.D - 30.4.1906 of Lt, Col: W.D.Gunn, Superintendent, Civil - Veterinary Dept - "Senior Veterinary Assistant V.P. Subramaniya Mudaliar is informed that the work during the year especially in connection with inoculation deserves special mention and great credit is due to him for his endeavours in obtaining a very wide popularity for the new treatment in the Tanjore District. He has responsible for nearly one half of the total number of cattle inoculates by the Dept. during the year.

Extract from the Annual report of the Dept. 1908 - 1909 Part I (Lt Col.W.D. Gunn) take this opportunity of stating that present success of inoculation - operation is mainly due to the tact displayed by the Veterinary Inspector, V.P.Subramaniya Mudaliar.



# பதவி உயர்வு


வெ.ப.சு. அவர்கள் தாம் பெற்றுக் கொண்ட கால்நடை மருத்துவப்பணியைத் திறம்படவும், உண்மையாகவும், மிகுந்த சிரத்தையாகவும் ஆற்றுவதை கண்ட மேலதிகாரிகள், கால்நடை மருத்துவத் துறையின் டெபுடி சூப்பிரண்டண்ட் ஆப் சிவில் வெட்னரி சர்வீசஸ் எனும் உயர் பதவியில் அவர்களை நியமித்தார்கள். அவ்வுயர் பதவிக்கு முதலியாரவர்கள் கடும் முயற்சி செய்தபோது, மேஜர் J.D.E.ஹோன்ஸ் துரை அவர்கள் எழுதிய நற்குறிப்பு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. அதன் விவரம் வருமாறு:

Extract from the endorsement Dis No.831 Dated 12.9.1901 of Major J.D.E. Holnes M. A., A. V. D.Supt., C.V. Dept. on the application of V.P.S. Mudaliar for the post of a Dy.Supt. "I cannot speak too highly of the work which this Stock inspector has done since I have had charge of this office. He is an extremely hard-working and trust - worthy officer worthy of promotion".

Extract from letter Dis.No.837 Dated 14.9.1901 from Major J.D.E. Holnes M. A., A. V.D. Supt. Civil Veterinary Dept., Madras Presidency to the Board of Revenue: Stock Inspector Subramania Mudaliar has invariably carried out his duties to my entire satisfaction I consider him to be a very valuable Veterinary Assistant. As he was the most useful Stock Inspector,he has had very much heavier work given him than the other Stock Inspector & he has always shown himself ready & capable of

doing whatever was required of him. I believe him also to be absolutely trust worthy in the execution of his duty & I strongly recommend him for whatever promotion the Board see him fit to confer to him.

இப்படிப்பட்ட நேர்மையான பரிந்துரைகளினால்தான் முதலியார் அவர்கள் 1911ஆம் ஆண்டு கால்நடை மருத்துவத் துறையின் மிக உயர்ந்த பதவியான டெபுடி சூப்பிரண்டண்ட் ஆப் சிவில் வெட்னரி சர்வீசஸ் உத்யோகத்தைப் பெற்றார். இத் துறையில் ஆங்கிலேயர்களின் தலைமைப் பொறுப்பில் அவர்களுக்குச் சற்று இணையான உயர்பதவியை அந்நாளில் எட்டியவர் நம் முதலியார் ஒருவரே என்று வரலாறு தெரிவிக்கின்றது.



# இந்தியக் கால்நடைச் சங்க இதழின் பாராட்டு


இந்தியக் கால்நடை சங்க இதழ் (I.V.J.) Indian Veterinary Journal (vol III No.1/1936) பெருந்தகை வெ.ப.சு அவர்களைப் பற்றி எழுதிய கட்டுரையில் "முதலியார் அவர்கள் தமது தொடர் முயற்சியாலும், உழைப்பினாலும்" படிப்படியாக ஏணியில் ஏறுவதைப் போன்று முன்னேறி உயர்பதவியான டெபுடி சூப்பிரண்டண்ட் பதவியை அடைந்தவர் எனத் தெரிவிக்கிறது. மேலும் 1915ஆம் ஆண்டு அவர் ஓய்வு பெற்றதைப்பற்றி வருந்தி எழுதிய குறிப்பையும் தெரிவிக்கிறது.

Extract: Mr.Mudaliar rose by degress from the lowest rage of the official leader by the sheer force of his Merit, with none to back him up excepting his own good work in the field, until in 1911, he was raised as a Deputy superintendent of the civil veterinary dept Madras. He held office in that capacity for nearly four years and retired from service on the 14th August 1915 (i.e.) exactly on his 59th birthday after an approved service of nearly 30 years under the Govt. of Madras.

Extract: Mr.F. Ware, the then Chief Superintendent, Civil Veterinary dept, Madras Wrote in the Administration report for 1915-1916 "The Dept. and the public generally have

suffered a loss through the retirement of M.R.Ry.V.P. Subramania Mudaliar Avargal".

பணியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் அந்த ஆண்டு முடிவுறும் இலாக்கா ஆய்வறிக்கையில் திரு முதலியார் அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெற்றது இலாக்காவுக்கு மிகப்பெரிய இழப்பாக கருதியாக தக்க ஆதாரத்தோடு உயர்அதிகாரி எழுதிய குறிப்பினை இந்தியக் கால்நடைச் சங்க இதழ் சுட்டிக்காட்டுகிறது.



# கால்நடைப் பட்டதாரிகள் மாநாட்டில் தலைமை

வெ.ப.சு. அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் நெல்லைத் தாலுக்கா போர்டு துணைத்தலைவர், தலைவர் போன்ற பணிகளில் ஈடுபடலானார். சென்னை மாநில கால்நடைத்துறை பட்டதாரிகளும் வெ.ப.சு அவர்களுக்கு மிக உயர்ந்த கௌரவத்தையும், மரியாதையையும் அப்போது அளித்து வந்துள்ளனர்.

1921ஆம் ஆண்டு நடைபெற்ற சென்னை மாநில கால்நடைத் துறைப் பட்டதாரிகளின் முதல் மாநாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப் பட்ட தலைவராக வெ.ப.சு. அவர்கள் வீற்றிருந்து கால்நடைத் துறை வளர, கால்நடை மருத்துவம் செழிக்க, மருத்துவ ஆசிரியப்பணிப் பொலிவுடன் விளங்க தக்கதொரு சொற் பொழிவையும், அறிவுரையையும், வழங்கினார்கள் என்ற வொரு குறிப்பும் நமக்கு இந்தியக் கால்நடைச் சங்க இதழ் (I.V.J.) வாயிலாக தெரிய வருகின்றது.

"The Profession was not slow to do him (V.P.S) the honour that lay in its power. He was the first elected president of the *Madras Veterinary* Graduates conference held in 1921, when he gave utterence to thoughtful address full of sound advice to the profession and indicating the lines on which progress should proceed" - (Indian Veterinary Journal - Vol III No.1 - 1936).

# ஆசிரியர்களுக்குச் சலுகைகள் பெற்றுத் தந்த வெ.ப.சு.

அக்காலத்தில் கால்நடைத்துறையில் பணியாற்றும் ஒரு மருத்துவர் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலும் வந்து பணியாற்றக்கூடிய கட்டாயமும், மாறுதலும் வரும். அந்நிலையில் கிராமங்களில் பணிபுரிவதை விட கல்லூரியில் பணியாற்றுவது என்பது கடினமான ஒன்று. ஏனெனில் முறையாக திரும்பத் திரும்பப் படித்துவிட்டுத் தெளிவோடு மாணவர்களுக்குப் பாடம் நடத்த வேண்டும். உழைப்பையும், சிந்தனையையும் ஒருங்கே உறிஞ்சக் கூடிய வேலைப்பளு மிக்க ஆசிரியர் தொழிலுக்கு உரிய அலவன்ஸ் எனப்படும் கூடுதல் படி எதுவும் அக்காலத்தில் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக கால்நடை மருத்துவர்கள் பலர் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்கு அனுப்பியும் ஏதும் நடை பெறவில்லை. இந்தக் காலக்கட்டத்தில் வெ.ப.சு. அவர்கள் 1921ம் ஆண்டு நடைபெற்ற முதல் கால்நடைத்துறைப் பட்டதாரிகள் சங்க மாநாட்டில் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பணியாற்றுகின்ற பாடம் போதிக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு உரிய கூடுதல் அலுவன்ஸ் படி வழங்கப்பட வேண்டுமென அரசுக்கு அழுத்தமான கோரிக்கை வைத்தார்கள். அதன் பயனாக விரைவில் அலவன்ஸ் படி கிடைத்தாக மருத்துவர் M.S.சாஸ்திரி G.B.V.C. அவர்கள்

"My reminiscence of Mudaliar" என்ற கட்டுரையில் தெரிவிக்கிறார். ஆதாரம்: வெ.ப.சுப்பிரமணிய முதலியாரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நினைவு மலர் - 1940. (பக்கம்: 99-100). மேலும் வெ.ப.சு அவர்கள் 1924ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தியக் கால்நடைச்சங்க இதழின் (I.V.J) ஆரம்பகால சந்தாதாரராகவும் விளங்கினார் எனவும் அன்னார் எழுதிய அக்கட்டுரையின் வாயிலாக நமக்குத் தெரிய வருகிறது.



# கால்நடை மருத்துவ முகாமும் கட்டில் செய்த கதையும்

சுமார் 26 ஆண்டுகாலம் முதலியார் அவர்கள் கிராமங்களில் கால்நடை சம்பந்தமான பரிசோதனைகள், சிகிச்சைகள் அளித்தல் மற்றும் தடுப்பூசிகள் போடுதல் போன்ற மருத்துவப்பணிக்காக குக்கிராமங்களில் முகாம் போட்டு வேலை செய்துள்ளார். அநேகமாக மாதத்தில் இருபது நாட்கள் முகாம் தான். சிறு வயதிலிருந்தே வசதியாக வாழ்ந்த வெ.ப.சு அவர்கள் முகாம் செல்லுமிடங்களில் எல்லாம் சமையல் செய்வதற்கும், தட்டு முட்டுச் சாமான்களுக்கும் குறைவிருக்காதாம். படுக்கிற கட்டில் மட்டும் வசதி குறைவாகத் தான் இருக்கும் என்று வெ.ப.சு அவர்களின் நண்பர் அறிஞர் டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் ஒரு கட்டுரையில் தெரிவித்துள்ளார்கள். அந்த அனுபவச் சுவைமிக்க கட்டுரை இதோ:-

"வெ.ப.சு. அவர்கள் வெளியூர் முகாம் செல்வதற்கு கேம்ப் (Camp) கட்டில் செய்ய வேண்டும்" என்று முயன்றதெல்லாம் ஒரு கதை: மடக்கு கட்டில் ஒன்று செய்தார்கள். கேம்புக்குக் கொண்டு போய் ஒரு நாள் இரவு படுத்தார்கள். கொஞ்சம் தொய்ய ஆரமித்தது. தொய்யாமல் இருப்பதற்கு என்ன செய்யலாமென்று ஆலோசிக்க ஆரம்பித்து விட்டார்கள். கட்டிலை விட்டிறங்கி அதை திருப்பிப் போட்டுச் சட்டம் கால்களையெல்லாம் அசைத்துப் பார்த்து, "சரி சரி குறுக்குக் கம்பி கொடுத்துவிட்டால் தொய்யாமல் விறைப்பாய் இருக்கும்"

என்று நிச்சயத்துக் கொண்டார். மனசு இப்படி யோசனைக்குள் போன பிறகு தூக்கமேது- சிவராத்திரி தான். காலையில் அந்தச் சத்திரத்துக்குத் தாசில்தார் திரு.பஞ்சாபகேச சாஸ்திரி முகாம் வந்தார். கட்டிலை பார்த்து நல்லமாதிரியாய் இருக்கிறது என்று சொன்னார். அவ்வளவு தான். "உங்களுக்கே கட்டிலை வைத்துக் கொள்ளுங்கள். நான் வேறு செய்து கொள்கிறேன். முகாம் வந்தால் எப்படியும் தரையில் படுக்கக் கூடாது. கட்டிலில் தான் படுக்க வேண்டும். அல்லாத பட்சத்தில் தூக்கத்திற்குப் பங்கம் ஏற்படும். (முதலியார் அவர்களுக்குத் தூக்கம் பிடித்த காரியம் என்பது நமக்குத் தெரியுமே). முகாம்களில் கட்டில் ரொம்ப அவசியம்" என்று சொல்லித் தாசில்தாருக்குக் கட்டிலைக் கொடுத்துட்டுப் புறப்பட்டு விட்டார்கள். ஊர் வந்ததும் புதுக்கட்டில் நூதன திருத்தங்களோடு தச்சரைக் கொண்டு செய்வித்தார்கள். இப்படியாக நடந்த சம்பவங்களை எண்ணி முடியாது. புது மாதிரியாக முகாம் கட்டில் செய்ய வேண்டியது தான். அவைகளை உடன் தங்கிய சர்க்கியூட் உத்தியோகஸ்தர் களுக்குத் தத்தம் பண்ண வேண்டியதுதான். இந்த விதமாக இருபத்தைந்து வருஷங்கள் கட்டில்களை எளிதாக மடக்கவும், நீட்டவும், தொய்யாமல் விறைப்பாக இருக்கவும் பளுவாக இல்லாமல், லேசாய் இருக்கவும் தகுந்தபடி செய்வதில் முதலியார் அவர்களை எடிசனுக்குத் தம்பி என்கிறார் அறிஞர் டி.கே. சிதம்பரநாத முதலியார். முகாமுக்கு எடுத்துச்சென்ற கட்டிலில் எத்தனையோ உத்யோகஸ்தர்களை படுக்கும்படி செய்து மகிழ்ச்சி கொடுத்திருக்கிறார்கள் வெ.ப.சு, என நகைச்சுவைத் ததும்ப. 1937ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 'கலைமகள்' மாத இதழில் கட்டுரையாக வடித்துள்ளார் தமிழறிஞர் டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

# ஆசிரியப்பாவில் ஒரு கவிதை


முதலியார் அவர்கள் ஏறக்குறைய இருபது நூல்கள் எழுதி தமிழ் இலக்கியத்திற்குச் சேவை செய்துள்ளார். கால்நடைத்துறைக்குச் சில புத்தகங்கள், கையேடுகள், மற்றும் சிறுபிரசுரங்கள் ஆகியவற்றை முதலியாரவர்கள் வெளியிட்டிருப்பதும் நாம் அறிந்ததே. எருதுக்கான இலக்கணம் என்னவென்பதை ஆசிரியப்பாவில் கவிதையாக வடித்துள் ளார் வெ.ப.சு. கருத்தோடு ஓசை நயமும் இணைந்து வருகிறது இப்பாடலில்,

### எருதுக்கான இலக்கணப்பாடல்

ஏர்கொண்ட மாட்டுக் கிலக்கணமி யாதென்னில்
 எழில் பெறும் உடும்புத்தலை
இனியதாய்க் கறுத்துத் திரண்டொளிரு கின்றகண்
 இணைத்துச் சிறுத்தகற்கொம்
பிசை பெறும் முயற்செவி இரட்டைக் கழுத்ததில்
 இசைந்தொட்டியுள்ள தாடி
இலகிரட்டைச் சிமிழொடு கூன லுற்றுயிர்
 இரட்டை முதுகிருபுறத்தும்
வார் கொண்ட மைந்துறும் பருமென்பு தங்கிய
 வனப்பொடு புடைத்திடும் விலா
மன்னும் உள்ளங்கையின் அடங்கத் தகுந்த கடை
 வியிறுபின் ஏறு சட்டம்

மருவரணை வால் போல் சிறுத்த பேரழகேறு
    வால் கரும்பாம்பு தன்னை
மானும் கருந்தாரை ஒட்டு கோசம் பெரிய
    வகிருறும் இரட்டை நாடி
கூர்கொண்ட கடைதலுற் றிடுதம்ப மொத்துக்
    குலாவும் குறும் பருங்கால்
குலவுக் கருங்கலொத் திணையுறுங் குத்துக்
    குளம்பு முதலாம் அவயவம்
கொண்டுடலம் நிண்டு குறு ரோமம் செறிந்த தோல்
    கூறுமத்திம திண்ணமாய்க்
குலமயிலை கரியமால் வெள்ளைகரு வெள்ளைமெய்
    குளிர்சந்த னப்புல்லையாஞ்

சீர்கொண்ட நிறமெதேன் கொண்டுகொள் ளிக்கொம்பு
    செங்கோல்வெட் டுக்குளம்பு
தேய்கின்ற அரைகுளம் பிணையடிகள் சாத்துகால்
    திரியுமந் திக்கால்முதல்
தீங்கெல்லாம் நீங்கிமுன் காற்சுவட்டுக்குமுன்
    செய்யபின் காற்சுவடுறத்
திடநடைகொள் வேகமுறும் இடபம், இடபங்களுட்
    செப்பும் அர சென்னலாமே.



# அறிவியல் செய்தி தரும் கோம்பி விருத்தம்

வெ.ப.சு அவர்கள் தமிழ் இலக்கிய நூல்கள் சுமார் 16 நூல்கள் எழுதியுள்ளதாக அறிகிறோம். அவற்றுள் கோம்பி விருத்தம் என்னும் நூல் மட்டும் சற்று உயிரியல் மற்றும் அறிவியல் செய்திகளை உள்ளடக்கி உள்ள நூல். வெ.ப.சுவின் உயிரியல் அறிவு நமக்கு இந்நூலில் புலப்படும். கோம்பி விருத்தம் என்பது கோம்பி என்னும் ஓணான் வகை செந்துவை பாடுபொருளாகக் கொண்டு விருத்தப்பாவால் எழுத்தப்பட்ட செய்யுள். ஆங்கிலத்தில் J. Merric (ஜெ.மெர்ரிக்) எனும் கவிஞர் எழுதிய The Chameleon எனும் பாடலின் பொருளை உள்வாங்கி அதனை துணைக்கு வைத்துக் கொண்டு தமிழில் புதுமாதிரியாக கோம்பி விருத்தம் எனும் செய்யுளை இயற்றியுள்ளார். வெ.ப.சு அவர்கள்.

## கோம்பி விருத்தத்தின் பொருள்

**"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"**

எனும் குறளின் உட்கருத்தை கோம்பி விருத்தத்தில் சாரமாக வைத்துச் சொல்லணி நயங்களுடன், உவமைகளை உள்ளடக்கி, படிப்போர் பரவசப்படும் வகையிலும், தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துகின்ற நூலாகவும் கோம்பி விருத்தத்தை நமக்குத் தருகிறார் வெ.ப.சு அவர்கள்

**நூலின் செய்தி:-** வெயில் கொடுமையில் அவதியுற்று பாலைவனம் நோக்கி நடந்து செல்லும் இரண்டு வழிப் போக்கர்கள் இளைப்பாற ஒரு சோலையை அடைகிறார்கள். சோலையை அடைந்து அங்கே ஆனந்தமாக பசியாறிவிட்டு இயற்கை எழிலை ரசிக்கும்போது கோம்பி எனும் பச்சோந்தியைக் காணுகின்றனர். அதில் ஒரு வழிப்போக்கன் கோம்பியன் நிறம் நீலம் என்கிறான். இல்லை இல்லை, நான் நேற்று பார்த்தேன். அதன் நிறம் பச்சை என்கிறான். இருவரும் அதன் நிறம் இன்னது என்று வாதிட்டுச் சண்டையிடும் போது மூன்றாவதாக ஒரு வழிப்போக்கன் அங்குவந்து நான் கோம்பியைப் பார்த்துள்ளேன், நேற்றிரவு நான் விளக்கு வெளிச்சத்தில் கோம்பியைப் பார்த்தேன், அதன் நிறம் கறுப்பு என்கிறான். தற்பொழுது என் பையில் ஒரு கோம்பியைப் பிடித்து வைத்துள்ளேன் என்று சொல்லி பையிலிருந்து எடுக்கிறான். அப்பொழுது அக்கோம்பி (ஓனான்) வெள்ளை நிறமாக இருந்தது. வழிப்போக்கர்கள் மூவரும் தங்கள் நிலைமையைப் புரிந்துகொண்டு அவரவர் குற்றத்தை உணர்ந்தனர்.

ஒரு பொருளுக்குப் பல பக்கங்கள் உண்டு. அன்றியும் அது கா்ல, நேர பேதம், இட பேதம் முதலிய பேதங்களினாலும், பயம், கோபம் ஆகிய குணங்களினாலும் மாறுதல் அடையும். இந்த உண்மையை அறியாதவர்களே தாங்கள் கண்டதுதான் சரி என்று வாதிப்பார்கள் என்று நீதிபோதனையாக வெ.ப.சு இந்நூலில் தெரிவிக்கிறார். இதோ அந்த முக்கியப் பாடல்:-

**"எப்பொருள் எவரெவர் இடத்துத் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் அறிதல் மெய்யறி(வு)
இப்புவிதனில் என எண்ணிடாதுயாம்
தப்புறு கலாஞ் செய்து தாழ்வை யுற்றனம்"**

**- கோம்பி விருத்தம் - பாடல் 53.**

இந்நூலில் வழிப்போக்கர்கள் பாலைநிலத்தில் உள்ள சோலையில் தாகம் தீர்க்க உதவியப் பயணிமரம் (water tree or Travellers Tree) மற்றும் டெமராப் பசுமரம் எனும் இரு மரங்களைப் பற்றி விவரிக்கிறார்கள். முதல்வகை மரம் விசிறிவாழை எனப்படும் ஒருவகை வாழை. மட்டையில் நீரை சேகரித்து வைத்து வழிப்போக்கர்களுக்குத் தாகம் தீர்க்க உதவுகிறது. இதில் டெமராப் பசுமரமானது பால்போன்ற சுவைமிக்க நீரை வழிப்போக்கர்களுக்குத் தரவல்லதாக வெ.ப.சு. கூறுகிறார்கள். தனக்குத் தெரிந்த தாவரவியல் செய்தி களைக் கோம்பி விருத்தத்தில் உரிய இடத்தில் பயன்படுத்திப் படிப்பவர்களுக்கு அறிவியல் அறிவை ஊட்டுகிறார் வெ.ப.சு. மேலும் வெ.ப.சு. அவர்கள் கோம்பியைப் பற்றிச் சொல்லும் போது "கோம்பி எனும் பச்சோந்தி (ஓணான்செந்து) இருபத்து நான்கு மணி நேரத்தில் ஆறுவகை நிறங்களில் தோற்ற மளிப்பதாகவும். அதனுடைய வண்ண மாற்றத்துக்கு அகத்தே ஏற்படும் கோபம், பயம், முதலியனவும் வெளிப்புறம் நிகழும் இரவு, பகல் முதலியனவும் காரணம் என்கிறார். மேலும் இந்த வகை ஐந்து (ஓணான்) நிறமாற்றமின்றி உடல் மாற்றமும் செய்ய வல்லது என்றும், சில சமயங்களில் உடலை உப்பி பெரிய தாகவும், ஒடுக்கி சின்னதாகவும் காட்டவல்லது என்றும் தெரிவித்துத் தனக்குள்ள விலங்கியல் அறிவினை நாம் அறிய கோம்பி விருத்தத்தில் தருகிறார் அறிஞர் வெ.ப.சு." அவர்கள்.

# கோம்பி விருத்தத்தைப் பாராட்டிய அறிஞர்கள்

**"கோம்பி விருத்தம், குமைந்து நரியெலிகள்**
**தேம்பி யிறும்புஞ் சிறைவளையும் - போம்படி வந்**
**தானா முகில் விதானத்தாலரியணை**
**வீற்றிரைய மின்றிருந்ததே"**

**- இராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை.**

கோம்பி விருத்தம் மெய்யாகவே என் மனதுக்கு விருந்தாகியது. அது நரிவிருத்தத்தையும், எலி விருத் தத்தையும் காடுகளிலும், வளைகளிலும் மறைவிடந்தேடி யோடச் செய்து, பூவாகிய வயிரங்களாலும், காயாகிய மரகதங் களாலும் அலங்கரிக்கப் பெற்ற உயர்ந்த பைந்தருச் சிங்கா தனத்தின் மேல் உடுமணிகளிழைத்த அகல் விசும்பு விதானத்தின் கீழ்க் கெம்பீரமாக அரசு வீற்றிருக்கும் போலும். கோம்பி விருத்தத்தின் நடை மிகவும் மனோகரமானது. அதன் உரை அதனை வாசிக்கும் பண்டிதரும் வித்தியார்த்திகளும் ஒரு நிகராக இன்பம் அனுபவிக்கும்படி உதவுகின்றது.

**- இராவ்பகதூர் சி.வை. தாமோதரம் பிள்ளை B.A., B.L.,**


"Though the grand work of the poem is apparently taken from the story 'chemeleon', the treatment of the subject is quite original. The ideas are in harmony with those of modern thought

while the style is classical and the metre is in strict confirmity with the canons of Tamil Prosody.

- **Mr.E.S.M. Senathi Raja,** L.L.B, Bar-at-Law,
Madras.

## திண்டிவனம் எம்.எஸ் சுந்தரேச ஐயர் அவர்களின் வாழ்த்துப்பா

**தேன்பிலிற்றுந் செந்தமிழால் பாரோர்க்குப்**
**கோம்பி விருத்தமுதற் கூறினேன் - தீம்புகழை**
**இம்மையிலேயேத்தி இனிமையுடன் பாடிடவோர்**
**கைம்மிகஉம் எம்மிறைவன் காப்பு.**



# ஞானபோதினி மற்றும் கிறித்தவக் கல்லூரி இதழ் தரும் பாராட்டு

It is a book of beautiful smiles, most of which are very apt and clearly illustrative and drawn directly from nature both animate and inanimate. This interesting poem inculcating ***audi alteran parten*** is a substantial addition to the Tamil Poetic literature and must commend itself to lovers of Tamil, Old and young.

**April - 1898. Gnanabothini**

The moral of it all is that "one object has many aspects and is affected by circumstances of time and place; but men who know not this affirm that what they themselves see is real."

**May 1898. Madras Christian College, Magazine.**

கோம்பி விருத்தத்தில் அமைந்துள்ள சொல்நயமும் பொருள்நயமும் மிகவும் பாராட்டிற்குரியனவாகும். இதைப் படிக்கும் பொழுது இடையிலே வைத்துவிட்டு வேறொன்றைச் செய்வதற்கு எனக்கு மனம் வரவில்லை.

**- டாக்டர் உ.வே.சாமிநாதய்யர்.**

கோம்பி விருத்தமானது காஞ்சிப்புராணம் முதலிய நூல்களைப் போலவே சொன்னயமும், பொருணயமும், அணிநயமும் விளக்கி நவின்றோர்க்கினிமை முதலாய அழகுடையதாய் அதிசயத்தைத் தருகின்றது.

**- வித்துவான் சேத்தூர் சுப்பிரமணியக் கவிராயர்.**

# பேரும் புகழும்

ஆயிரம் பிறைகண்டு பெருவாழ்வு வாழ்ந்த அறிஞர் பெருமகனார் வெ.ப.சு. அவர்கள் கால்நடைத் துறையில் மூன்று நூல்களும், தமிழன்னைக்கு 16 நூல்களும் படைத்துள்ளார்கள். 89 ஆண்டுகள் வாழ்ந்த அறிஞர் பெருமகனார் கால்நடைத் துறையையும், தமிழிலக்கியத் துறையையும் இருகண்களெனப் போற்றித் தொண்டு செய்துள்ளது, உள்ளங்கை நெல்லிக் கனியாகும். ஆங்கில அறிவைத் தமக்குத் துணையாக வைத்துக் கொண்டு தமிழன்னைக்கு அணிசெய்தவர் நம் முதலியார் அவர்கள்.

பரிசும், பட்டங்களும் அவரைத்தேடி வந்தது கண்கூடு. 1920ஆம் ஆண்டு நெல்லைத் தாலுகா போர்டு தலைவராக இருந்தபின் இவரது சேவையை அறிந்த ஆங்கிலேய அரசு இவரை 1922ஆம் ஆண்டு தென்காசி பெஞ்சுக் கோர்ட்டு நீதிபதியாக்கியது.

நீதித்துறையிலும் தம்முத்திரையைப் பதித்து நற்பெயரை ஈட்டிய முதலியாருக்கு ஆங்கில அரசாங்கம் 1.5.1926 அன்று "ராவ்சாஹிப்" பட்டம் அளித்துக் கௌரவித்தது. மேன்மை தங்கிய மாவட்டக் கலெக்டர் Mr. Tompe, M.A. I.C.S, துரையவர்கள் முதலியாரவர்களுக்குத் தென்காசியில் ஒரு தர்பார் நடத்தி அறிஞர்கள் முன்னிலையில் பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தார்.

# 80ஆம் ஆண்டு நிறைவு விழா

வெ.ப.சு அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவினை 1937ஆம் ஆண்டு ஆகஸ்டு 1ஆம் தேதி நெல்லைத் தமிழன்பர்கள் ஒன்றுகூடி டாக்டர் உவே. சாமிநாதய்யர் அவர்கள் தலைமையில் சீரோடும் சிறப்போடும் நடத்தினார்கள்.

விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசிய டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் தமது உரையில் "முதலியார் அவர்களது விழாவுக்கு வந்ததைப்பற்றி மகிழ்ந்து முதலியார் மகாகவி யென்றும், பெரிய வித்துவான் என்றும், எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நீண்ட ஆயுளையும், திடகாத்திரத்தையும் கொடுக்கும்படி பிரார்த்திப்பதாகவும் சொன்னார்."

மேலும் 'என் சரித்திரம்' எனும் தமது வாழ்க்கை வரலாற்று நூலில் உ.வே.சா. வெ.ப.சு அவர்களைப்பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார்:


"அக்காலத்தில் ஸ்ரீமான் ராவ்சாகிப் வெ.ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் மிருக வைத்திய சூப்பிரண்டண்ட்டாக இருந்தார். அவருடைய பழக்கம் எனக்கு உண்டாயிற்று. அவருடைய தமிழன்பும், கம்பராமாயணப் பற்றும் எங்களுடைய நட்பை வன்மை பெறச் செய்தன. கும்பகோணம் அருகில் அவர் மிருக வைத்திய சிகிச்சை முகாம் போடும் போதெல்லாம் அவரைக் கண்டு பேசி சல்லாபம் செய்து வருவேன். தாம் இயற்றும் செய்யுட்களை எனக்குச் சொல்லிக்காட்டி வருவார்.

ஆங்கிலம் படித்துத் தக்க உத்தியோகத்திலிருக்கும் ஒருவருக்குத் தமிழில் அவ்வளவு ஆழ்ந்த அன்பு இருந்தமை முதலில் எனக்கு வியப்பை உண்டாக்கியது".

விழாவில் பேராசிரியர் டாக்டர். ரா.பி.சேதுப்பிள்ளை அவர்கள் பேசுகையில் "வெ.ப.சு. அவர்களுக்கு" டாக்டர் பட்டம் (D.Litt) கொடுக்கச் சென்னைப் பல்கலைக் கழகம் விரைவில் முன்வர வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

தமது 80ஆம் ஆண்டு நிறைவு விழாவில் ஏற்புரை வழங்கிய வெ.ப.சு. "ஏதோ தாம் செய்யும் சிறு தமிழ்த்தொண்டை இவ்வளவு ஆடம்பரமாய் விழாக்கொண்டாடியதற்காக எல்லோருக்கும் வந்தனம் அளிப்பதாகத் தெரிவித்தார்."

மேலும் இவ்விழாவில் திவான் பகதூர் சர் S.குமாரசாமி ரெட்டியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், திரு. ஆவுடையப்ப பிள்ளை, திரு. ஏ.சி.பால்நாடார், திரு. வி.வி.சீனிவாசாச்சாரியார் பேராசிரியர் அ.சீனிவாசராகவன், டாக்டர் ரா.பி.சேதுப்பிள்ளை, மற்றும் வீ.சூ.நடராஜ ஐயர் ஆகியோர் பேசியதாக 4.8.1937ஆம் நாளிட்ட 'தினமணி' நாளிதழ் தகவல் தெரிவிக்கின்றது.



# அறக்கட்டளை

பெருந்தகையாளர் வெ.ப.சு. அவர்கள் தமது 80ஆம் ஆண்டு நிறைவு விழாவில் கிடைத்த நன்கொடைத் தொகையில் செலவு போக மீதமிருந்த தொகையை திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரிக்கு வைப்பு நிதியாக கொடுத்து அறக்கட்டளை ஏற்படுத்தி தமிழில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்குப் பரிசுத் தொகை வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். நிறைவாக தாம் எழுதிய நூல்கள், சேர்த்து வைத்து நூல்கள் அனைத்தையும் ம.தி.தா. இந்துக் கல்லூரிக்குக் கொடையாக எதிர்கால சமுதாயம் பயன்பெறும் பொருட்டு அளித்துள்ளார்கள்.

ஆண்டுதோறும் ம.தி.தா. இந்துக் கல்லூரி வெ.ப.சு வின் பிறந்த நாளைக் கொண்டாடி வருகிறது. வெ.ப.சு. தமிழ் ஆய்வு மையம் எனும் ஒரு மையத்தையும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஏற்படுத்தியுள்ளது. பொதிகை ஆய்வு மலரையும் அவ்வப்போது வெளியிட்டு வருகிறது.

இவ்வாறாகத் தமிழகத்தின் தலைசிறந்த மனிதராக, தொண்டுள்ளம்கொண்டவராக விளங்கிய வெ.ப.சு. அவர்கள் 1946ஆம் ஆண்டு தமது 90ஆம் வயதை எட்டிப்பிடிக்கும் தருவாயில் 12.10.1946 அன்று இறைவனடி சேர்ந்தது வருத்தமான ஒன்றுதான். நூறு ஆண்டுகள் வெ.ப.சு அவர்கள் வாழ்ந்திருந்தால் இன்னும் சில கொடைகள் தமிழுக்கும், நமக்கும் கிடைத்திருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

# வெ.ப.சு. - சில நினைவலைகள்

இந்நூலாசிரியர் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் உறவினர் டாக்டர் எஸ். வைத்தியநாத முதலியார் மகன் திரு. தீத்தாரப்ப முதலியார் அவர்களைச் சந்தித்தபோது, அவர் இளமைக் காலத்தில் சிறுவனாக இருந்தபொழுது வெ.ப.சு அவர்களுடன் பழகிய நினைவுகளை நம்மிடம் பகிர்ந்து கொண்டார்.

1942ஆம் ஆண்டு வாக்கில் டாக்டர் வெ.ப.சு அவர்கள் தனது கண் பரிசோதனைக்காக சென்னை வந்திருந்தபோது எங்கள் இல்லத்தில் ஒரு வார காலம் தங்கியிருந்தார்கள் என்ற தகவலையும் அச்சமயம் சென்னையில் பிரபலமாக விளங்கிய டாக்டர். ஜார்ஜ் சக்ரியாஸ் அவர்களிடம் சிகிச்சை பெற்றுக் கொண்டார் என்று தெரிவித்தார். எங்களுடன் தங்கியிருந்தபோதுதான், சென்னையில் தான் இருக்கின்ற விவரத்தைச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிக்குத் தெரியப்படுத்தினார்கள்.

வயதில் பெரியவரும், மூத்த கால்நடைத் துறை அறிஞருமான வெ.ப.சு. அவர்களைப் பார்க்கச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்கள் டாக்டர் எம்.எஸ். அனந்தநாரயண ராவ், டாக்டர் விநாயக முதலியார், டாக்டர் கே.எஸ் நாயர், டாக்டர் பனகல் சீனிவாச ராவ், டாக்டர் நரகரி ராவ், டாக்டர் எஸ்.ஆர். பட்டாபிராமன், டாக்டர் அனந்த பத்மநாபன் ஆகியோர் எங்கள் இல்லத்திற்கு வருகை தந்து வெ.ப.சு. அவர்களின் நலன் விசாரித்து அளவளாவி மகிழ்ந்து சென்றனர். அடுத்தநாள் அப்பொழுது கால்நடைத் துறையில்

இயக்குநராக இருந்த டி.ஜெ. ஹார்லி மற்றும் ஒசூர் அரசு கால்நடைப் பண்ணையின் தலைமைக் கண்காணிப்பாளர் டாக்டர் லிட்டில் வுட் ஆகிய ஆங்கிலேய பிரமுகர்களை எனது தந்தையார் டாக்டர் எஸ். வைத்தியநாத முதலியார் அவர்களுடன் பார்க்கச் சென்றார்கள். அப்போது அவருக்கு வயது 85. அந்த வயதிலும் அவர்கள் திடகாத்திரமாகவும், நல்ல ஞாபக சக்தியுடனும் கால்நடை மருத்துவம் மற்றும் துறைத் தொடர்பான பல விஷயங்களை அவர்களிடம் விவாதித்தார்கள். சென்னையில் தான் வந்த பணி நிறைவடைந்து திருநெல்வேலி செல்வதற்கு முதல் நாள், சிறந்த பல் மருத்துவரான டாக்டர் Freeman அவர்களை மரியாதை நிமித்தமாகச் சந்தித்துவிட்டுச் சென்றார்கள். பின்னர் எனது தலைமையாசிரியர் குருவில்லா ஜேக்கப் அவர்களது பங்களாவிற்கு என்னையும் அழைத்துச் சென்றார். குருவில்லா ஜேக்கப் அவர்களின் தந்தையார் வெ.ப.சு. அவர்களின் சம காலத் தோழர். கீழ்ப்பாக்கம் ஆர்ம்ஸ் சாலையில் எங்கள் இல்லத்தில் வெ.ப.சு.தங்கியிருந்தபோது அவரது சிறு சிறு தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியவனாக நான் இருந்தேன். நாங்கள் பொருட்கள் வாங்கப் புரசைவாக்கம் அல்லது சேத்துப்பட்டு செல்ல வேண்டியிருந்தது.

புரசைவாக்கத்தில் உள்ள பெயர் பெற்ற ரொட்டிக் கடை பெங்கால் பேக்கரி எங்களுக்கு வேண்டிய ரொட்டி, இனிப்பு வகைகள், வெண்ணெய் போன்றவற்றைத் தினமும் வண்டியில் எடுத்து வந்து எங்களுக்கு அளிப்பார்கள். மறுநாளைக்கு என்னென்ன வேண்டுமோ அதற்கான பட்டியலை அவர்களிடம் அளிப்போம். ஸ்பென்சர் போன்ற நிறுவனமும் தங்களது உன்னதமான பொருள்களின் பட்டியலை எங்களுக்கு அனுப்பி வைத்துத் தேவையானவற்றை வண்டியில் எடுத்து வந்து தந்தனர். ஐஸ்கிரீமின் விலை அப்போது ஐந்து பைசாவில் இருந்து ஒரு ரூபாய் வரையிலான விலையில் கிடைத்தது. வெ.ப.சு. அவர்கள் பயணம் செய்வதற்கு வசதியாகப் புரசைவாக்கம்

டேங்க் ராக்ஸி டாக்ஸி நிலையத்திலிருந்து வாடகைக் கார் ஐந்து ரூபாய் நாள் வாடகைக்கு வீட்டிற்கு அழைத்து வந்தேன். அனைவரும் என்னிடம் வெ.ப.சு. ஐயாவின் வருகை மிகவும் உபயோகமாக இருந்ததாகக் கூறினர். அவர் எனக்கு ஆங்கில மொழியின் நுணுக்கங்களைக் கற்றுத்தந்தார்கள். அப்பொழுது அயனாவரம் பால் மையத்திலிருந்து எங்களுக்குப் பால் மற்றும் பால் சார்ந்த பொருள்களை அனுப்பி வைத்தனர்.

## வெ.ப.சு. அவர்களின் குடும்பம்


புகழ்வாய்ந்த செல்வக்குடும்பத்தில் பிறந்த வெ.ப.சு. அவர்களின் குடும்பத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும். வெ.ப.சு. அவர்கள் தமது 18ஆவது வயதில் ஆழ்வார்க்குறிச்சி, மேலப்பண்ணை இராமலிங்க முதலியார் அவர்களின் குமாரத்தி வேலம்மாள் அண்ணியை மணந்து கொண்டார்கள். அவர்களோடு 18 ஆண்டுகள் இல்வாழ்க்கை நடத்தினார்கள். இவ்வம்மையார் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றார்கள். முதல் மகள் உலகம்மாள் அண்ணியை அதே ஆழ்வார்க்குறிச்சி எம்.பி.எம். இராமலிங்க முதலியார் அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார்கள். இரண்டாவது மகள் கல்யாணி அண்ணியைத் திருநெல்வேலி மேடை தளவாய் ரெங்கநாத முதலியார் அவர்கள் மணந்து கொண்டார்கள்.


முதல் மனைவி மறைந்த மறு வருடம் திரு. வெ.ப.சு. அவர்கள் தென்காசித் தாலுக்கா கிடாரக்குளம் இராமசாமி முதலியார் மகள் வடிவம்மாள் அண்ணியை மணம் செய்து கொண்டார்கள். இவ்வம்மையார் இரண்டு ஆண் மக்களையும், ஒரு மகளையும் ஈன்றெடுத்தார்கள். முதல் மகன் பெயர் பழனியப்ப முதலியார். அவர் பி.ஏ., வரை படித்து கிராம நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டு ஹோமியோபதி வைத்தியம் செய்து ஏழை மக்களுக்கு சேவை

யாற்றியுள்ளார்கள். அடுத்த மகன் பெயர் தீத்தாரப்ப முதலியார். இவர், வேளாண் நிருவாகத்தைக் கவனித்துக் கொண்டும், நெல்லை மாவட்டத்தில் புகழ்மிக்க ஆட்டோ மொபைல் மோட்டார் டீலர் கம்பெனிகளின் ஆலோசகராகவும் புகழ்பெற்று விளங்கினார். கடைசி மகள் செல்லம்மாள் அண்ணியை மேடை தளவாய் சண்முக குமாரசாமி முதலியாருக்கு மணம் முடித்துக் கொடுத்தார்கள். இப்பொழுது, இந்நூலாசிரியர் சந்தித்த வெ.ப.சு.அவர்களின் சந்ததியர் திருவாளர் தீ. ரெங்கநாத முதலியார் அவர்கள் வெள்ளகாலில் வேளாண்மைத் தொழிலையும், திருநெல்வேலியில் வியாபார நிறுவனமும் நடத்தி வருகிறார்கள். இவர் வெ.ப.சு. அவர்களின் இரண்டாவது மகன் தீத்தாரப்ப முதலியாரின் மகனாவார். வெ.ப.சு. அவர்களின் நேர் பேரன் இவர் ஒருவர்தான் உள்ளார்.

அடுத்தவர் திரு. தீபன் அவர்கள். இவரையும் இந்நூலாசிரியர் வெ.ப.சு.அவர்களின் திருஉருவப்படம் வேண்டிச் சந்தித்து அவருடைய உதவிகளைப் பெற்றுள்ளார். திரு. தீபன் அவர்கள் வெ.ப.சு. அவர்களின் கொள்ளுப்பேரன். வெ.ப.சு. அவர்களின் முதல் மகன் பழனியப்ப முதலியார், பி.ஏ., அவர்களது மகன் கைலாசநாத முதலியாரின் மகன் திரு. தீபன். இவர் சென்னையில் வசிக்கிறார். அடுத்து இந்நூலாசிரியர் சந்தித்த அன்பர் வெ.ப.சு. அவர்களின் உறவினர் டாக்டர் எஸ். வைத்தியநாத முதலியாரின் (சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் – 1948 – 1950) மகனார் திரு. தீத்தாரப்ப முதலியார். இவரும் வெ.ப.சு.வின் அரிய புகைப்படத்தை இந் நூலாசியாருக்கு வழங்கி உதவியவர். அருமையான மனிதர் வெ.ப.சு. பற்றிய அரிய தகவல்களை அளித்தவர். சிறுவனாக இருந்தபோது வெ.ப.சு.அவர்களிடம் அன்பாகப் பழகியவர்.

வெ.ப.சு. தனது அருமை மகள் கல்யாணி அவர்களுக்குக் குழந்தையைக் கவனமாகப் பார்த்துக்கொள்ளச் சொல்லி எழுதிய கடிதம்.(12–03–1926)


12-3-26.



இந்தக் கருத்தைச் செல்லம்மாளிடம்
காட்டு. அடிக்கடி அவ்விடத்துச் செய்
தி எழுது.

வேண்டும்
உன் அன்புள்ள தந்தை
வெ. ப. சுப்பிரமணியன்.

இராவ்சாஹிப்

**வெ.ப. சுப்பிரமணிய முதலியார்** G.B.V.C. அவர்கள்


இயற்றிய நூல்கள் விவரம்:

**I. தமிழ் இலக்கிய நூல்கள்**

1. சுவர்க்க நீக்கம் (The Paradise Lost - **தமிழாக்கம்**)
2. கோம்பி விருத்தம்
3. நெல்லைச் சிலேடை வெண்பா
4. இராமாயண உள்ளுறைப் பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும்
5. கல்வி விளக்கம்
6. ஜான் மில்டனார் சரித்திரம்
7. சருவ சன செபம்
8. கம்பராமாயண சாரம் (பால காண்டம்)
9. கம்பராமாயண சாரம் (அயோத்தியா காண்டம்)
10. கம்பராமாயண சாரம் (ஆரண்ய காண்டம்)
11. கம்பராமாயண சாரம் (கிட்கிந்தா காண்டம்)
12. கம்பராமாயண சாரம் (சுந்தர காண்டம்)
13. கம்பராமாயண சாரம் (யுத்த காண்டம்)
14. அகலிகை வெண்பா
15. தனிக்கவித் திரட்டு
16. அம்பலவாண தேசிகமாலை

**II. கால்நடைத்துறை நூல்கள்**

17. இந்து தேசத்துக் கால்நடைக்காரர் புத்தகம்
18. இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணுகின்ற - அதிக பிராணாபாயமான வியாதிகள் பற்றிய புத்தகம்
19. கால்நடைகளுக்கு வியாதி வராமல் அம்மை குத்துதலும் அதன் உபயோகங்களும்.



உம்பளாச்சேரி காளை





தமிழறிஞர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்



## சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி

